# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1994/69 - 2016 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.11. 24

1994/69 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

*எனது குறிப்பிலக்கம்.:* NIDS/LND/5/ACQ/68.

*காணி அமைச்சின் குறிப்பிலக்கம்.:* 4-3/9/2011/WS/292.

பொது மக்களின் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணித் துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், நிவிதிகல பிரதேச செயலாளர் பிரிவில், நிவிதிகல சிறு பிரிவில், நிவிதிகல கிராமத்திலமைந்த, நில அளவை மாஅதிபரால் அளந்து, 2016.08.16 ஆந் திகதியிடப்பட்டு அளந்து தயாரிக்கப்பட்ட CM 620400 வரைபடத்தின் வலய ,இலக்கம் 07 ன் 05 ஆம் பிரிவு, படிவம் 04 ஐக் கொண்ட வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 97 எனக் குறிப்பிடப்பட்டுள்ள " பின்கந்த வத்த" எனும் காணியில் சுமார் 0.1000 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு:

**துண்டு இல. 97 - காணியின் பெயர்: பின்கந்த வத்த; உரிமை கோருவோர்: வரையறுக்கப்பட்ட அகலவத்த பெருந்தோட்ட கம்பனி, இல. 10, ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு 8.; விஸ்தீரணம்: 0.1000 ஹெக்டயார்.**

வடக்கு: காணித்துண்டிலக்கம் 98; கிழக்கு: காணித்துண்டிலக்கம் 98; தெற்கு: காணித்துண்டிலக்கம் 98; மேற்கு: காணித்துண்டிலக்கம் 98;

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு தை மாதம் 16 ஆந் திகதி மு.ப. 09.30 மணிக்கு, நிவிதிகல பிரதேச செயலகத்தில் என் முன் தோன்றும்படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகை-யையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு தை மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். எஸ். அவந்தி சேனாரத்ன,
பிரதேச செயலாளர்,
நிவிதிகல.

பிரதேச செயலகம்,
நிவிதிகல,
2016, நவெம்பர் 21.

12 – 469

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(திருத்தம்)

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது குறிப்பு இல.:* BD/BW/LND/6/AQUIS/09.

*காணி அமைச்சின் குறிப்பு இல.:* LD/05/2005/LH/534.

2016.08.27 ஆந் திகதிய 1981/98 ஆம் இலக்கமுடைய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரதேச செயலாளரின் பெயர் பி. பி. என். குணரத்ன என குறிப்பிடப்பட்டுள்ளது அதனை ஜி.ஜி.என். குணரத்ன என திருத்த வேண்டுமென்பதை பணிவுடன் தெறவித்து கொள்கிறேன்.

மேலும் 3ஏ பக்கத்தில் குறிப்பிடப்படுகின்ற 2016, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திருதிக்கு பதிலாக 2016, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி எனவும் 2016 செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதிக்கு பதிலாக 2016 திசெம்பர் மாதம் 27 ஆம் திகதி எனவும் திருத்தப்பட வேண்டும் என்பதை குறிப்பிடுகிறேன்.

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
பண்டாரவளை.

பிரதேச செயலகம்,
பண்டாரவளை,
2016, நவெம்பர் 21.

12 – 470